
கம்ப்யூட்டர் யுகத்தில் விசை பலகையை லாவகமாக இயக்க வேண்டும். இந்தியாவிலிருந்து அயல்நாட்டு கணினி பணிக்காக செல்பவர்களின் தாய்மொழியாக, முதலிடத்தை பெற்றுள்ளது தமிழ்மொழி. எனவே தமிழ் விசைப்பலகையை இயக்க முறையாக கற்பது இயன்றியமையாதது.




## விளக்கம் 1

எட்டு விரல்களை படத்தில் காட்டியுள்ளபடி வைக்கவும். வழிகாட்டி விசைகளான “யளனக” விலும் “ ்டமத” விலும் பூவை தொடுவதுபோல வைக்கவும். 25 வரிகள் தட்டச்சு செய்ய வேண்டும். ஒவ்வொரு எழுத்தையும் தட்ட வேண்டும் அழுத்தக்கூடாது.

பயிற்சி : யளனக ட்மத யளனக ட்மத யளனக ட்மத
யளனக ட்மத யளனக ட்மத யளனக ட்மத

## விளக்கம் 2

படத்தில் காட்டியுள்ளபடி க, ா தட்டச்சு செய்யவும். கீழ்காணும் பயிற்சியை 25 வரிகள் தட்டச்சு செய்ய வேண்டும்.

பயிற்சி : யளனகபக ட்மதாத யளனகபக ட்மதாத யளனகபக ட்மதாத
யளனகபக ட்மதாத யளனகபக ட்மதாத யளனகபக ட்மதாத

## விளக்கம் 3

‘ங’ என்னும் எழுத்தை வலது கை சுண்டு விரலால் தட்ட வேண்டும். பின்வருவனவற்றை 25 வரிகள் தட்டச்சு செய்ய வேண்டும்.

பயிற்சி : யளனகபக நட்மதாத யளனகபக நட்மதாத யளனகபக நட்மதாத
யளனகபக நட்மதாத யளனகபக நட்மதாத யளனகபக நட்மதாத

பின்வரும் சொற்களை 5 வரிகள் தட்டச்சு செய்யவும்.

| | | | |
|---|---|---|---|
| மட | மானம் | காளான் | மங்காத |
| பட | பாகம் | பட்டம் | பட்டயம் |
| தட | யாகம் | பத்தாம் | பங்காக |
| கள் | தாகம் | காத்தல் | மங்களம் |
| தன் | காகம் | கானகம் | தங்காத |
| மான் | கானம் | தாக்கம் | கடனாக |
| தான் | பாடம் | பக்கம் | பாடாத |
| யான் | மாயம் | தட்டான் | தாமதம் |
| படம் | காயம் | தாடகம் | மனப்பாடம் |
| பயம் | தாயம் | கள்ளன் | தள்ளாட்டம் |
| பதம் | மாதம் | மட்டம் | பகட்டாக |
| கனம் | பாதம் | தங்கம் | கள்ளனாக |
| மனம் | மாடம் | மகதம் | மட்டமாக |
| மகள் | தாளம் | கட்டம் | மத்தளம் |
| மதம் | தானம் | பங்கம் | தன்மானம் |

## விளக்கம் 4

பின்வரும் வாக்கியத்தை 5 வரிகள் தட்டச்சு செய்யவேண்டும்.

1) தங்கமான மாடங்கள்.
2) காயம் படாத மாயமான்.
3) பயமான மகள் பாதம் தள்ளாட்டம்.
4) தாகமான காகம் தாடகம் பக்கம்.
5) பத்தாம் யாகம் காத்த பகட்டான தன்மான மகத மன்னன்.


## விளக்கம் 5

வலது கை சுண்டு விரலால் வலது மாற்று விசையை (Shift Kay) இயக்கி வலது கை விரல்களால் "ினுகுழு" வை இயக்க வேண்டும். இடது கை சுண்டு விரலால் இடது மாற்று விசையை அழுத்தி வலது கை விரலால் "ஞடுமுதுழ" வை இயக்க வேண்டும்.

கீழ்காணும் பயிற்சியை 25 வரிகள் தட்டச்சு செய்ய வேண்டும்.

பயிற்சி : ினுகுழு ஞடுமுதுழ ினுகுழு ஞடுமுதுழ
ினுகுழு ஞடுமுதுழ ினுகுழு ஞடுமுதுழ

**பின்வரும் பயிற்சியை படத்தில் காட்டியுள்ளபடி விரல்களை பயன்படுத்தி 25 வரிகள் தட்டச்சு செய்ய வேண்டும்.**




பயிற்சி :

யளளுனனுககுபழுக ஙஞடடுமமுததுாழத யளளுனனுககுபழுக ஙஞடடுமமுததுாழத


யளளுனனுககுபழுக ஙஞடடுமமுததுாழத யளளுனனுககுபழுக ஙஞடடுமமுததுாழத

**பின்வரும் சொற்களை 5 வரிகள் தட்டச்சு செய்ய வேண்டும்.**

| | | | |
|---|---|---|---|
| படு | மதம் | கடுகம் | மரகதம் |
| முள் | பட்டு | முழுதும் | குங்குமம் |
| பாடு | தட்டு | முப்பால் | குள்ளம் |
| காடு | முகடு | தமக்கு | கள்ளம் |
| தடு | தமிழ் | தனக்கு | பகட்டு |
| முழு | குட்டு | மகுடம் | பட்டாளம் |
| மாடு | ஞானம் | துள்ளும் | பழக்கம் |
| மாது | பழம் | தமக்கை | கழுத்து |
| காது | படகு | துக்கம் | தயக்கம் |
| யாது | பழகு | மடங்கு | முட்டாள் |
| யாழ் | தள்ளு | பாழாக்கு | கட்டழகு |
| தாள் | தாக்கு | பழுத்தல் | மங்களம் |
| தாழ் | பாட்டு | முடக்கம் | குடும்பம் |
| தாது | பாக்கு | பல்லாக்கு | பத்துபாட்டு |

**பின்வரும் வாக்கியத்தை 5 வரிகள் தட்டச்சு செய்ய வேண்டும்.**

1) பள்ளுப்பாட்டு பயனுள்ளது.
2) துள்ளாத மனமும் துள்ளும்.
3) குழம்பாத குடும்பம் தங்க கழகம்.
4) கடன் பட்டு பங்கமானது கட்டுபாடு.
5) கட்டழகன் பாட பழுத்த பழம் முழுதும் பாழானது.




பட்ஜெட்

படத்தில் காட்டியுள்ளபடி தட்டச்சு செய்யவும்.

யணுறறுநநுசசுவகூக டிடீஜைஐரருலலுத யணுறறுநநுசசுவகூக டிடீஜைஐரருலலுத
யணுறறுநநுசசுவகூக டிடீஜைஐரருலலுத யணுறறுநநுசசுவகூக டிடீஜைஐரருலலுத


## விளக்கம் 6

பின்வரும் சொற்களை 5 வரிகள் தட்டச்சு செய்ய வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| படி | கரம் | வைரம் | லாவகம் | ஐராவதம் |
| நடி | காரம் | மாதுளை | குடித்தல் | சுவைத்தான் |
| கடி | வரம் | சாதம் | காத்தல் | நகைத்தான் |
| தடி | தரம் | சுத்தம் | சத்தம் | வந்தான் |
| நான் | மரம் | சுற்றம் | சாதகம் | பாடினான் |
| நாள் | சுகம் | ராகம் | சரகம் | தந்தான் |
| வான் | சுவடி | தாளம் | வாட்டம் | முடித்தான் |
| கூன் | தவடு | வருடம் | சதுரம் | வைத்தான் |
| காசு | காவடி | குரவன் | வட்டம் | பாயாசம் |
| நாடு | கரடி | கருடன் | கட்டம் | தட்டச்சு |
| பாடு | காலடி | சுடுதல் | பட்டம் | மருத்துவன் |
| மாடி | பழகு | நாற்றம் | தச்சர் | நனைந்தான் |
| பசு | தரும் | நத்தை | குரவர் | பாடினாள் |
| வடு | தலை | வாசல் | கூட்டம் | வஞ்சம் |
| சுடு | வலை | நாசம் | வழக்கு | நவரசம் |

பின்வரும் வாக்கியத்தை 5 வரிகள் தட்டச்சு செய்ய வேண்டும்.

1) சுத்தம் சுகம் தரும்.
2) பண்டிதன் பாமரனை பாராட்டினான்.
3) துயரம் பக்குவம் தரும்.
4) தையலவர் சாதனை வளருகிறது.
5) குடியரசு சமத்துவத்தை தந்தது.




## பட்ஜெட்

**படத்தில் காட்டியுள்ளபடி இருபது வரிகள் தட்டச்சு செய்ய வேண்டும்.**

**யணஒஓஉஊஎஏகெ ._,?இஈஅஆசூத யணஒஓஉஊஎஏகெ ._,?இஈஅஆசூத**

**யணஒஓஉஊஎஏகெ ._,?இஈஅஆசூத யணஒஓஉஊஎஏகெ ._,?இஈஅஆசூத**

## விளக்கம் 7

**பின்வரும் சொற்களை 5 வரிகள் தட்டச்சு செய்ய வேண்டும்.**


| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆதி | சேவை | உரிய | ரேடார் | இன்டெல் | ஏக்கம் |
| அது | பெண் | ஐவர் | மைக்ரோ | அசெம்பிள் | ஏமாற்றம் |
| அதே | கேரளா | அரிசி | எனது | தடுப்பது | ஏற்றம் |
| பெற | கோவா | எளிய | டையோடு | வன்பொருளை | எறிந்த |
| இது | கோள் | உயர் | உள்ளே | நேப்பியர் | ஔடதம் |
| ஒரு | என | உதவி | நேரம் | ஆணைகள் | இல்லம் |
| செய் | ஐயா | என்ற | ஓட்டு | ஆய்வாளர் | ஈசைபட |
| வெளி | அனு | அளவு | ஊரக | ஊட்டம் | இன்னல் |
| ஏழை | மே | உணவு | எறிந்த | ஆகாயம் | ஊதியம் |
| பேர் | ஒலி | உள்ள | ஔவை | இராணுவம் | எலக்ட்ரான் |
| போர் | ஒளி | செய்ய | ஆசான் | எண்ணம் | திட்ட அளவை |
| உள் | மொழி | அனல் | ஊஞ்சல் | இணைதல் | ஆப்ரேட்டிங் |
| செய் | பேறு | ஆசியா | தலைமுறை | ஒன்பது | புரோக்ராம் |
| தேதி | வேதி | ஒயர் | அனலாக் | ஓட்டுதல் | அட்டவணை |
| ஏர் | அகர | மோடம் | மதர்போர்டு | கொடுத்தல் | சொல்லாக்கம் |
| பொது | இந்த | நோபல் | இணைப்பான் | உண்டியல் | உபயோகம் |

**பின்வரும் வாக்கியத்தை 5 வரிகள் தட்டச்சு செய்ய வேண்டும்.**

1) அறம் செய் என்றார் ஔவையார்.
2) வாய்மையே வெல்லும் என்கிறது முண்டாக உபநிடதம்.
3) படித்தவன் பாவம் செய்யக்கூடாது.
4) இப்படை தோற்கில் எப்படை வெல்லும்.
5) அனைத்தையும் இழந்து விட்டாயா, இன்னும் எதிர்காலம் இருக்கிறது. எனவே ஊக்கத்தை இழக்காதே.

## விளக்கம் 8


துணைகாலை வலதுகை சுண்டு விரலால், மாற்று விசையை பயன்படுத்தி தட்டச்சு செய்ய வேண்டும்.




தூது இதிலுள்ள 'தூ' என்கிற எழுத்தை தட்டச்சு செய்ய முதலில் மாற்று விசை பயன்படுத்தி து தட்டச்சு செய்து பிறகு வலதுகை சுண்டு விரலால் (ᴛ) தட்ட வேண்டும்.

## விளக்கம் 9


நகரா விசையை தட்டும்போது உருளைத்தாங்கு நகராது. மேல்கொக்கி (கி), மேல்சுழிக் கொக்கி (கீ) கீழ்க்கோடு (பு), கீழ்ச்சுழிக் கொக்கி (பூ) வை வலது கை சுண்டு விரலால் தட்டச்சு செய்ய வேண்டும்.




'பு' என்கிற எழுத்தை தட்டச்சு செய்ய, படத்தில் காட்டியுள்ளபடி முதலில் சுண்டு விரலால் கீழ் கோட்டை (ı) தட்ட வேண்டும். பிறகு 'ப' என்கிற எழுத்தை தட்ட வேண்டும்.

## விளக்கம் 10

டூ, மூ, ரூ, லூ, ளூ என்கிற 5 எழுத்தை மட்டும் தட்டச்சு செய்ய பின்வரும் முறையை கடைபிடிக்க வேண்டும்.




'மூ' என்கிற எழுத்தை தட்டச்சு செய்ய, படத்தில் காட்டியுள்ளபடி முதலில் மாற்று விசையை பயன்படுத்தி சுழியை தட்டச்சு செய்ய வேண்டும். பிறகு 'மு' என்கிற எழுத்தை தட்டச்சு செய்ய வேண்டும்.

பின்வருவனவற்றை இருபது வரிகள் தட்டச்சு செய்ய வேண்டும்.

கிஙிசிஞிடிணிதிநிபிமியிரி**லி**விழிளிறினி
கீஙீசீஞீடீணீதீநீபீமீயீரீலீவீழீளீறீனீ
க்ங்ச்ஞ்ட்ண்த்ந்ப்ம்ய்ர்ல்வ்ழ்ள்ற்ன்
குஙுசுஞுடுணுதுநுபுமுயுருலுவுழுளுறுனு

கிஙிசிஞிடிணிதிநிபிமியிரி**லி**விழிளிறினி
கீஙீசீஞீடீணீதீநீபீமீயீரீலீவீழீளீறீனீ
க்ங்ச்ஞ்ட்ண்த்ந்ப்ம்ய்ர்ல்வ்ழ்ள்ற்ன்
குஙுசுஞுடுணுதுநுபுமுயுருலுவுழுளுறுனு

பின்வரும் சொற்களை 5 வரிகள் தட்டச்சு செய்ய வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| விண் | கடத்தி | கூட்டுறவு | அகத்தியர் |
| விசை | ஆர்பிட் | இடைவெளி | தொல்காப்பியர் |
| தனி | நீதிபதி | கற்பூரம் | ஆதிமந்தியார் |
| வீடு | பிளாப்பி | புரோட்டான் | சீத்தலை சாத்தனார் |
| நூறு | புனிதம் | நியுட்ரான் | திருவள்ளுவர் |
| வீரர் | பூவிலங்கு | சிலிக்கான் | வீரமாமுனிவர் |
| கல்வி | பிரிண்டர் | பராமரித்தல் | ஒட்டக்கூத்தர் |
| அமீபா | மூவேந்தர் | ஈகைத்திருநாள் | உமறுப்புலவர் |
| பகுதி | பரிணாமம் | இயற்கணிதம் | பாரதியார் |
| தூரம் | புணர்ச்சி | அஃது | பாரதிதாசன் |
| வீரர் | புரிகிறது | தாயும் தந்தையும் | அகிலன் |

## பொன்மொழிகள்

“இனிப்புச் சுவை என்பது சர்க்கரையின் குணமும் அல்ல; நம்முடைய குணமும் அல்ல; சர்க்கரைத் துகளோடு நாம் ஒன்றும்போது அந்த இனிப்பை உணர்கிறோம்.”

–ரொனாலட் ஃபிஸ்சா

“மாணவர் தயாராகிவிட்டால் ஆசான் வந்துவிடுவான்.”

“வெற்றி பெற வேண்டும் என்ற பதற்றம் இல்லாமல் இருப்பதுதான் வெற்றி பெறுவதற்கு சிறந்த வழி.”


“பிரச்சனையை சகித்துக் கொள்ளாமல் எதிர்கொண்டு சமாளியுங்கள்.”

“அன்பு கலக்காமல் தயாரிக்கப்படும் ரொட்டி சுவைக்காது. அது கசக்கும். ஒரு மனிதனின் பாதிப் பசியைத்தான் அது போக்கும்.” – கலில் கிப்ரான்.

“எல்லா நல்ல மனிதர்களும் உலகத்திற்கு தகுந்தபடி தங்களை மாற்றிக் கொள்கிறார்கள். ஒரு சில முரண்பட்ட மனிதர்கள் மட்டுமே தங்களுக்கு ஏற்றபடி உலகை மாற்றியமைப்பதில் சளைக்காமல் பாடுபடுகிறார்கள். உலகின் எல்லாவித முன்னேற்றங்களும் இப்படிப்பட்ட முரண்பட்ட நபர்களையும், அவர்களின் புதுமை கண்ணோட்டத்தையும் தான் நம்பி இருக்கின்றன.” – பெர்னாட்ஷா

“நிச்சயமற்ற சமயத்திலும், குழப்பமான சூழ்நிலையும் தாக்குபிடிப்பதற்கு திட்ட மேலாளர்கள் கற்றுகொள்ள வேண்டும். அதிநேர்த்தியான திட்டத்தை அடுத்தவாரம் செயலாற்றுவதைவிட நல்ல திட்டத்தை அதிரடியாக இன்று நிறைவேற்றுவது அதிக பலன் தரும்.”

“உனது எல்ல நாள்களிலும் தயாராக இரு. நீ கோவில் சிலையெனில் வணங்குவார்கள், வாசற்படி எனில் மிதிப்பார்கள். எனவே பட்டறையில் நீ கல்லானால் அடி தாங்கு, சம்மட்டி எனில் அடி.”




விளக்கம் 11

‘ஷ’ என்கிற எழுத்தை தட்டச்சு செய்ய, படத்தில் காட்டியுள்ளபடி முதலில் சுண்டு விரலால் (⁂) தட்ட வேண்டும். பிறகு ‘உ’ என்கிற எழுத்தை தட்ட வேண்டும்.

## தமிழில் பிறமொழி சொற்கள்

மொழி தொடர்பால் பிறமொழி சொற்கள் தமிழில் கலந்தது. தமிழில் கலந்த பிறமொழி சொற்களை ஐந்து வரி தட்டச்சு செய்ய வேண்டும்.

**தமிழில் கலந்த வடமொழி சொற்கள்**
வருஷம், வாரம், ஸர்ப்பம், நாஸ்தி, ஆதி, யாமம், உரோகினி, பாக்கியம், சாரணர், சாவகர், தருமம், ஸ்ரீ ராஜராஜன்

**தமிழில் கலந்த இந்தி சொற்கள்**
நயா, பைசா, காதி

**தமிழில் கலந்த மராட்டி சொற்கள்**
அபாண்டம், கோலி, சலவை, சந்து

**தமிழில் கலந்த தெலுங்கு சொற்கள்**
கம்பல், ஜளிப்பு, ரம்பம், காயம், சுளுவு, ஜாஸ்தி, சாம்பார், கொலுசு, கடப்பாறை, ரவிக்கை, ஜாடி, ஜதை, வில்லங்கம்

**தமிழில் கலந்த கன்னட சொற்கள்**
சமாளித்தல், குலுக்குதல், பட்டாகத்தி, சொத்து, தண்டல், ஏகத்தாளம், குட்டு

**தமிழில் கலந்த மலையாள சொற்கள்**
வஞ்சி, அவியல், வெள்ளம், ஜன்மி

**தமிழில் கலந்த சிங்கள சொற்கள்**
முருங்கை, பில்லி, அந்தோ

**தமிழில் கலந்த பெர்சியன் சொற்கள்**
ரஸ்தா, திவான், ஷோக், தயார், சுமார்

**தமிழில் கலந்த அரேபிய சொற்கள்**
வசூல், ராஜா, ஜேப்பி, ஆஜர், முன்ஷி, ஜில்லா, இலாக்கா, லாயக்கு, ஷராம், ஜப்தி, ஜபர்தஸ்து, ஜாகன், சைத்தான்

**தமிழில் கலந்த துருக்கி சொற்கள்**
வான்கோழி, துப்பாக்கி

**தமிழில் கலந்த உருது சொற்கள்**
அக்கபோர், ஆசாமி, ராஜினாமா, கஸகஸா, கப்ஸா, சராசரி, கஜானா, ஜவாப்தாரி, பேஜார், ருஜு, ஹராம்

**தமிழில் கலந்த போர்ச்சுகீசிய சொற்கள்**
அலமாரி, ஏலாம், சாவி, ஆயா, பறங்கி

**தமிழில் கலந்த டச்சு சொற்கள்**
பப்ளிமாஸ், உலாந்தா, தோப்பு

**தமிழில் கலந்த பிரெஞ்சு சொற்கள்**
ஆஸ்பத்திரி, பீரோ, பொத்தான், லாந்தர்

**தமிழில் கலந்த ஆங்கில சொற்கள்**
போலீஸ், டஜன், ஷாப், சினிமா, கேஸ், காலரா, டிக்கெட், பில், பேப்பர், மீட்டிங், கார், ஓட்டல், லீவு, உயில், ஏக்கர், கோர்ட், பங்களா, பென்சில், நம்பர், கம்ப்யூட்டர்

## ஆய்த எழுத்து

**விளக்கம் 12**

**இடதுகை சுண்டு விரலால் ஃ என்கிற எழுத்தை தட்டச்சு செய்ய வேண்டும்.**

**பின்வருவனவற்றை இருபது வரிகள் தட்டச்சு செய்ய வேண்டும்**

**எஃகு, இஃது, அஃது, ஃபிரெஞ்சு**

## எண்கள்

**விளக்கம் 13**

**பின்வருவனவற்றை இருபது வரிகள் தட்டச்சு செய்ய வேண்டும்**

**1234567890 0987654321 1234567890 0987654321**

**1234567890 0987654321 1234567890 0987654321**

## மொரார்ஜி தேசாய்

**"நீ தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் ஏமாந்து போவாயா?" 1918–ஆம் ஆண்டு பம்பாய் மாகாணத்தில் துணை கலெக்டர் வேலைக்கு விண்ணப்பித்த 24–வது வயது நிரம்பிய மோரார்ஜியை நேர்முகத் தேர்வு அதிகாரி வினவியபோது உடனே பதில் கொடுத்தார் "நான் ஏன் ஏமாந்து போக வேண்டும்? இந்தப் பரந்த உலகம் என் முன்னே இருக்கிறது." இந்த தன்னம்பிக்கையும், சுயமரிமயாதையும்தான் மொரார்ஜி தேசாயை அவருடைய வாழ்நாள் முழுவதும் வழிநடத்தியது.**

**1918–ல் பம்பாய் மாகாண சிவில் சர்வீஸ் பணியில் சேர்ந்து, 12 ஆண்டுகள் பல்வேறு பொறுப்புக்களை வகித்தார். வேலையை விடுமாறு அரசு ஊழியர்களுக்கு மகாத்மா காந்தி விடுத்த அறைகூவலை ஏற்று, 1930–ல் துணை கலெக்டர் வேலையை உதறித் தள்ளிய மொரார்ஜி சட்ட மறுப்பு இயக்கத்தில் சேர்ந்தார். சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றதற்காக அடுத்த நான்காண்டுகளில் மூன்றுமுறை சிறையில் அடைக்கப்பட்டார்.**

**"வெள்ளையனே வெளியேறு" இயக்கத்தில் பங்கேற்றதற்காக மூன்றாண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார். 1946 முதல் 1952 வரை உள்துறை மற்றும் வருவாய்த்துறை அமைச்சராக இருந்தார். 1952–ல் முதலாவது பொதுத் தேர்தலுக்குப் பிறகு பம்பாய் முதலமைச்சரானார்.**

ஜனதா கட்சியை உருவாக்குவதில் மொரார்ஜி தேசாய் முக்கியப் பங்காற்றினார். 1977 பொதுத் தேர்தலில் ஜனதாக் கட்சி வென்றபோது, முதலாவது காங்கிரஸ் அல்லாத மத்திய அரசில் பிரதம மந்திரியாக அவர் பதவியேற்றார்.

ஏறத்தாழ ஐம்பதாண்டு காலம் மிகுந்த ஈடுபாட்டுடன் நாட்டிற்குப் பணியாற்றி, முன்னணி தேசியத் தலைவர் என்ற தகுதியைப் பெற்றார். தன்னம்பிக்கை, துணிச்சல், அச்சமின்மை, காந்தீயக் கோட்பாடுகளின் அடிப்படையில் புதுமை செய்தல் – இவையே அவரது பதவிக்காலம் முழுவதும் மிகுந்திருந்தன. மனிதகுல நலனில் மெய்யான அக்கறை கொண்டிருந்த மொரார்ஜி தேசாய், மிகுந்த உறுதியோடு இருந்து, உண்மையைப் பின்பற்றி, தூய வழியில் சாதனைகள் படைத்தார். அவருடன் வேறுபாடு கொண்டவர்கள்கூட, அவருடைய நேர்மையைச் சந்தேகிக்கவில்லை.

அவர் தம்முடைய சுயசரிதையில், “கொள்கைகளைப் பொறுத்தமட்டில், சுலபமாக செல்வாக்கு அல்லது செல்வம் அல்லது அதிகாரம் பெறுவதற்காக அவற்றை விட்டுக் கொடுக்கக்கூடாது” என்று எழுதியுள்ளார்.

1995 பிப்ரவரி இறுதியில் தம்முடைய 100–வது வயதில் அடியெடுத்து வைத்த மொரார்ஜி தேசாயிடம் இளைஞர்களுக்கு என்ன சொல்கிறார்கள் எனக் கேட்ட போது “இளைஞர்கள் அச்சமின்றி, உண்மையான வாழ்க்கை நடத்த வேண்டும். அவர்கள் பணிவாக இருக்க வேண்டும். நாட்டின் நெறிகளுக்கு எதிரான எதையும் அவர்கள் ஏற்கக்கூடாது. உயரிய குறிக்கோளுடன், தாய்நாட்டிற்காக ஈடுபாட்டுடன் சேவை செய்ய வேண்டும்” என்றார்.

மொரார்ஜி தேசாயின் நூற்றாண்டை நாடு முழுமையாகக் கொண்டாட முடியவில்லை. 1995, ஏப்ரல் 10–ம் தேதி மறைந்து விட்டார்.

---

குறிப்பு : பத்து டிகிரி இடதுபுற ஓரம் விட்டு, இரட்டை வரி இடைவெளியில் பிழையின்றி தட்டச்சு செய்ய வேண்டும்.

எண்கள் பயிற்சிக்காக கீழ்க்கண்ட புள்ளி விவரப் பட்டியை 10° - 65° முறையில் தட்டச்சு செய்து கோடிடுக.

**பல்வேறு விபத்துக்களில் உயிரிழந்தோர் விவரம்**

| மாநிலம் | 1996–97 | 1997–98 | 1998–99 | 1999–2000 |
|---|---|---|---|---|
| பஞ்சாப் | 1,56,167 | 2,10,278 | 7,13,468 | 3,02,378 |
| இராஜஸ்தான் | 58,656 | 38,853 | 68,698 | 96,654 |
| பீகார் | 31,652 | 54,353 | 24,332 | 63,322 |
| தமிழ் நாடு | 23,233 | 35,942 | 38,386 | 31,343 |
| கேரளா | 2,54,355 | 3,14,357 | 1,27,355 | 25,235 |
| கர்நாடகா | 54,255 | 37,763 | 74,345 | 97,331 |

10° - 24° 24° - 26° 26° - 34° 34° - 36° 36° - 44° 44° - 46° 46° - 54° 54 - 56° 56 - 65°

## இடைவெளி விதி
## (விளக்கம் 14)

(:) (;) (,) நிறுத்த குறிகளுக்கு ஒரு எழுத்து இடைவெளி விடவேண்டும்.
(.) (?) (!) நிறுத்த குறிகளுக்கு இரண்டு எழுத்து இடைவெளி விடவேண்டும்.

## கோஹினூர் வைரம்

'கோஹினூர் வைரத்தை விலைகொடுத்து வாங்கும் பணத்தில் இரண்டரை நாட்கள் உலக மக்கள் அத்தனை பேருக்கும் உணவளிக்க முடியும்' என்று அப்போதைய சரித்திர ஆசிரியர்கள் கோஹினூர் வைரம் பற்றிக் குறிப்பிடுகிறார்கள்!

கோஹினூர் வைரம் அலாவுதீன் கில்ஜியின் சேனாதிபதி மாலிக் கஃபூரால் ஆந்திராவிலிருந்து கைப்பற்றப்பட்ட பிறகு குவாலியர் மன்னர் குடும்பத்துக்குச் சென்று, ஹுமாயூன் கைக்கு மாறியது. பாரசீக மன்னர் ஷா தாமாஸ்ப் கைக்குப் போய், பிறகு தட்சிணப் பீடபூமியை ஆண்ட நிஜாம் ஷாவை அடைந்தது. 17–ம் நூற்றாண்டில் ஷாஜஹான் கைக்குப்போன, வைரத்தை பாரசீக மன்னர் நாதிர்ஷா கைப்பற்றினார். கோஹினூர் – அதாவது, 'மலையளவு ஒளிவீச்சு' என்று அந்த வைரத்துக்குப் பெயரிட்டதும் அவர்தான். பிறகு 'பஞ்சாப் சிங்கம்' ரஞ்சித்சிங் கைவசம் மாறி, ஆங்கிலேயர்களின் கீழ் பஞ்சாப் போன பிறகு சர்.ஜான் லாரென்ஸ் என்ற ஓர் உயர் அதிகாரியின் பாக்கெட்டுக்குப் போக, பிறகு பிரிட்டிஷ் மகாராணி விக்டோரியாவுக்குப் பரிசாகத் தந்தார். ஆக, இன்றுவரை பிரிட்டிஷ் கிரீடத்தைக் அலங்கரித்து வருகிறது சரித்திரப் பிரசித்தி பெற்ற கோஹினூர் வைரம்!

# சிறுகதை இலக்கியம்

வாய்வழிக் கதை சிறுகதை இலக்கியத்தின் விதையாகி, செய்யுளின் உட்கதையாக முளைத்து, வீரமாமுனிவர் காலத்தில் தண்டாக வளர்ந்து, வா.வே.சு. ஐயர் காலத்தில் கிளையாக கிளைத்து, மணிக்கொடி காலத்தில் இலைகளாக தழைந்து, ஐம்பதுகளில் கனியாகி, எண்பதுகளில் மலராகி, இருபதாம் நூற்றாண்டு உரைநடையில் விழுதும் தோப்புமாய் வளரத்தலைப்பட்ட சிறுகதையை பற்றி இலக்கியவாதிகள் கூறுவதை காண்போம்.

“ஒரு முரண்பாட்டை சித்தரிக்கும் உரைநடை இலயக்கியம்.” – சுஜாதா

“சிறுகதை என்பது குதிரைப்பந்தயம் போல தொடக்கமும், முடிவும் வேகமாக அமைய வேண்டும்.” – செட்ஜ்விக்

இடையில் வாசகர்களை இம்ப்ரெஸ் செய்யும் செய்திகள், ஆசிரியரின் திறமையை அளந்தரியும் கருவிகளாகும்.

“கச்சிதமான நடை, சிக்கனப் பதப்பிரயோகம், கூரிய பார்வை இவை சிறுகதை ஆசிரியர்கள் தனித்தன்மையை வெளிப்படுத்தும்.” – இந்திரா பார்த்தசாரதி

“தலைப்பு – மூன்று, நான்கு சொற்களுக்கு மேற்படாத வகையில் செறிவுடன் சுருக்கத்துடன் அமைய வேண்டும்.” – சிட்னி

“ஒரு துப்பாக்கி சுவரின் மீது மாட்டப்பட்டிருந்ததாக கதைத் தொடக்கத்துக்கு வருவதால் முடிவில் துப்பாக்கி கட்டாயம் வெடித்தாக வேண்டும். இல்லையேல் முற்பகுதியில் அதை காட்டக்கூடாது.” – செகால்

“நடை ஆசிரியரை தனித்து இனம் காட்டுகிற வகையில் அமையும் அவரது தனித்தன்மையான வெளியீட்டுப்பாடு.” – முற்ரே

“சிக்கலை காட்ட முயல்கிறதேயன்றி தீர்க்க முயல்வதில்லை.”
– வில்லியம் பீட்டர்.

“ஒரு கதையை படித்து முடிக்க எவ்வளவு நேரமாகுமோ அது அக்கதையின் கதை நிகழ் காலமாய் இருக்க வேண்டும்.”

“கதை மாந்தர் வருணனை சில வரி, காட்சி, நீண்டவருணனை விரைந்து செல்லும் நம் மூளை உட்கிரகித்துக் கொள்வதில்லை.”

பனிப்பாறை கோட்பாடு : “சொல்வது கொஞ்சம் உணர்த்துவது மிக அதிகம்.”

## கணினியைப் பராமரித்தல்

கணினி இருக்கும் இடத்தை தூசு மற்றும் வெப்பம் இல்லாமல் பார்த்துக்கொள்ளவும்.

கணினி இயங்கிகொண்டிருக்கும் போது சரியான முறையில் ஷட்டவுன் செய்யாமல் நேரடியாக ஆஃப் செய்தால் ஹார்டுடிரைவ் பாதிப்படைய வாய்ப்புள்ளது.

ஆன்டிவைரஸ் மென்பொருளால் ஹார்டுடிரைவையும் நினைவகத்தையும் வைரஸ் இல்லாமல் பார்த்துக்கொள்ளவும்.

முக்கியமான தகவலகளை வைத்திருந்தால் அதை பேக்கப் எடுத்துக்கொள்ளவும்.

மாதமொரு முறையாவது உங்கள் ஹார்டுடிரைவை டீபிராக்மென்டர் மற்றும் ஸ்கேன் டிஸக் மென்பொருள்கொண்டு சரிசெய்யவும்.

ஆன்டிவைரஸ் மென்பொருளை இணையம் மூலம் புதுப்பித்துக் கொள்ளவும்.

மென்மையான துணியால் மானிட்டர், கீபோர்ட், சிஸ்டம்பெட்டி ஆகியவற்றை தூசுகள் படியாமல் துடைத்துவிடவும். மௌஸின் அடிப்பகுதி மற்றும் மௌஸின் இரப்பர் பந்து ஆகியவற்றை சுத்தம் செய்யவும்.

டிஸ்க் கிளீனில் மென்பொருள் பயன்படுத்தி டிஸ்கில் உள்ள தேவையற்ற ஃபைல்களை அழித்துவிடவும்.

வருடம் ஒருமுறையாவது சிஸ்டம் பெட்டியைக் கழற்றி அதனுள் உள்ள மதர்போர்ட், துணைப்பலகையை கவனமாகச் சுத்தப்படுத்திப் பொருத்தவும்.

சீமாஸ் செட்அப்–ல் உள்ள கான்பிகரேசன் தகவலை எழுதிவைத்துக் கொள்ளவும்.

கணினியை நேரடியாக சுவிட்ச் பாக்ஸில் இணைக்காமல் சர்ஜ் சப்ரஸர் அல்லது யூ.பி.எஸ். போன்றவற்றுடன் இணைக்கவும். இவை திடீரென்று ஏற்படும் அதிக மின்னழுத்தம், குறைந்த மின்னழுத்தம் போன்றவற்றிலிருந்து கணினியைப் பாதுகாக்கும்.

கணினி இயங்கி கொண்டிருக்கும் போது ஒரு போதும் பேரலல் மற்றும் சீரியல் போர்ட் உள்/வெளி சாதனங்களை இணைக்ககூடாது.

கணினியின் உள்சாதனங்களைத் தொடும்போது நம் உடலில் உள்ள நிலை மின்சாரம் (Static Electricity) கணினியின் மின்னணு சாதனங்களைத் தாக்காமல் இருக்க (antistatic wrist) கைப்பட்டையை கையில் அணிந்துக்கொள்ள வேண்டும்.

கீழ்க்கண்ட தொழில்முறைக் கடிதத்தை 10° - 60° முறையில் தட்டச்சு செய்ய வேண்டும்.

10°
க. மதிவாணன், பி.ஈ.,
கட்டடப் பொறியாளர்.

42°
தொலைபேசி: 25754
24 நேதாஜி சாலை,
கோயம்புத்தூர் 641 003.
↕2
25 மே 2004.

திரு. வ. பூபாலன்,
14/2 மகாதேவன் தெரு,
அவினாசி சாலை,
கோயம்பத்தூர் 641 017.

ஐயா,

15°
ராம் நகரில் தாங்கள் வாங்கியுள்ள வீட்டு மனையை, கட்டடக் கலைஞர் மற்றும் மண் ஆய்வாளரோடு கடந்த வியாழக்கிழமை சென்று பார்த்தேன். மண் பரிசோதகர் மண்ணின் தன்மையை ஆய்வு செய்து, பத்து மாடிகள் கொண்ட கட்டடத்தைக் கட்டலாம் என சான்றிதழ் வழங்கியுள்ளார்.

தாங்கள் நேரில் தெரிவித்த ஆலோசனைகளையும் விருப்பத்தையும் அடிப்படையாகக் கொண்டு, நவீன தொழில் நுட்பத்தை உள்ளடக்கிய மூன்று கட்டட வடிவமைப்பு மாதிரிகளை இத்துடன் அனுப்பியுள்ளேன். தங்களுக்குப் பிடித்தமான வடிவமைப்பை எங்களுக்குத் தெரிவித்தால், உடன் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்வதோடு, கட்டடம் சிறந்த முறையில் கட்டிக் கொடுக்கப்படும் என உறுதியளிக்கிறேன்.

45°
தங்கள் நம்பிக்கையுள்ள,

47° ↕4

(க. மதிவாணன்)

கீழ்க்கண்ட வணிகமுறைக் கடிதத்தை 10° - 60° முறையில் தட்டச்சு செய்ய வேண்டும்.

35°

பரத் கூட்டமைப்பு

31° ↕2

(மின் விசிறி உற்பத்தியாளர்)

10°

43°

தொலைபேசி : 2473158
தந்தி : 'பரத்'

அஞ்சல் பெட்டி எண் 135,
17 சாந்தி நகர்,
திருநெல்வேலி 627 002.

↕2

கடித எண் 1172

25 ஆகஸ்ட் 2004

↕2

உரிமையாளர்,
இராதா மின் பொருள் அங்காடி,
14 தியாகராயர் சாலை,
சென்னை 600 017.

↕2

அன்புடையீர்,

↕2

தங்களின் 2004 ஆகஸ்ட் 18ஆம் நாளிடப்பெற்ற கடிதம் கிடைக்கப்பெற்றோம். நன்றி. தாங்கள் கேட்டுக்கொண்டபடி, நூறு மின்விசிறிகளை லாரி மூலம் அனுப்பியுள்ளோம்.

தற்போது நாங்கள் நிலை மின் விசிறி தயாரிப்பிலும் ஈடுபட்டுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். பல வண்ணங்களில், மிகக் குறைந்த எடையுள்ளதால், சந்தையில் எங்களுடைய நிலை மின் விசிறிக்கு நல்ல வரவேற்பு உள்ளது. பல்வேறு நிலை மின் விசிறிகளின் புகைப்படங்களோடு விலைப் பட்டியலையும் இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளோம்.

தங்கள் நம்பிக்கையுள்ள,
பரத் கூட்டமைப்பிற்காக,

↕4

(பரத் சீனிவாசன்)
நிருவாகி.

கீழ்க்கண்ட அரசு ஆணையை 10° - 60° முறையில் தட்டச்சு செய்ய வேண்டும்.

30° தமிழ் நாடு அரசு ↕2

33° சுருக்கம் ↕2

15°

ஆதிதிராவிடர் நலன் – சிறப்பு உள்ளடக்கத் திட்டம் – கண்காணிப்பாளர் பதவி – தொடர ஆணையிடப்படுகிறது.

---

27° ஆதிதிராவிடர் நலத் துறை ↕2

10° அரசு ஆணை எண் 336 40° நாள் 13 டிசம்பர் 1996

படிக்கப்பெற்றது. ↕2

20° - 50°

காலநடைத் துறை இயக்குநரின் ↕2
கடித எண் 5901/96, நாள்
10 மே 1996

------ ↕2

ஆணை :

↕2 15°

சிறப்பு மத்திய நிதி உதவியிலிருந்து செயல்படுத்தப்படும் திட்டங்களைக் கண்காணிக்கும் கண்காணிப்பாளர் பதவியை, அரசின் ஆணையை எதிர்பார்த்து, நீட்டித்த கால்நடைத் துறை இயக்குநரின் செயலுக்கு பின்ஏற்பு வழங்கி ஆணையிடப்படுகிறது.

↕2 2. மேற்கண்ட பதவிக்கான செலவினத்தை சிறப்பு மத்திய நிதியிலிருந்து விடுவிக்குமாறு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

↕2 28° (ஆளுநரின் ஆணைப்படி) ↕2 49°

க. மோகன்,

47° அரசுச் செயலாளர்.

↕2

பெறுநர்
இயக்குநர், கால்நடைத் துறை,
சென்னை 600 006. ↕2

27° ஆணைப்படி அனுப்பப்படுகிறது

↕4

50° பிரிவு அலுவலர்.

மனித உடல் வியக்கத்தக்க ஒன்றாகும். ஐம்புலன்களில் ஒவ்வொன்றும் ஒரு தனித் தன்மை படைத்தது. நவீன கருவிகளை உயர்வாக எண்ணி அதற்கு முக்கியத்துவம் கொடுக்கும் அளவுக்குக்கூட அற்புதமான இயற்கையான உயிர் ஆற்றல் உடைய உடலை அதன் இடைவிடாத இயக்கத்தை நாம் எண்ணிப் பார்ப்பதில்லை. உடல் உறுப்புகள் பாதிப்பு அடைந்த பின்பே அதன் அருமையையும் தேவையையும் உணர்ந்து பார்க்கின்றோம். சரி செய்ய மருத்துவத்தின் மூலம் முயல்கிறோம். என்னதான் நவீன மருத்துவம் இருந்தாலும் இயற்கையாய் உள்ள அதன் செயல்பாடுகளை மீண்டும் முழுமையாக உண்டு பண்ணி விட முடியாது. எத்தனையோ நூற்றாண்டுகளாக மனித சமுதாயம் இப்போதுள்ள நவீன கருவிகள் எதுவுமின்றி மனித சக்தியால் இயங்கும் கருவிகளை மட்டுமே பயன்படுத்தி சுற்றுச் சூழலுக்கு எந்த பாதிப்புமின்றி இயற்கையோடு இணைந்த இனிய வாழ்வை வாழ்ந்திருக்கிறது.

இன்று அறிவியலில் எவ்வளவோ வளர்ச்சி பெற்று பலவகையான நவீன கருவிகள், போக்குவரத்து வசதிகள், நவீன மருத்துவம், போர்க் கருவிகள், அணு ஆயுதங்கள் எனப் புதிய புதிய கண்டுபிடிப்புகள் வந்துவிட்டாலும் அவற்றோடு சேர்ந்து கடுமையான சுற்றுச்சூழல் சீர்கேடுகளும், உடலுக்கும் உள்ளத்திற்கும் பாதிப்புகளும் அதிகரித்து வருகின்றன. இதற்குச் சரியான தீர்வு இன்று வரை கிடைக்கவில்லை. மாசுபாடுகளைக் குறைக்கும் முயற்சிகளை அரசுகள் எடுத்தாலும் அவைகள் வெற்றிபெற வேண்டுமானால் மக்களின் ஆதரவு தேவை. சாலைகள் விரிவாக்கத்தின்போது அதிக அளவில் மரங்கள் வெட்டப்படுகின்ற நிலையில், மரக் கன்றுகளை அதிக அளவில் ஆங்காங்கு நட்டு வளர்த்துப் பெரிதாக்கினால் காற்று மாசைக் குறைப்பது மட்டுமின்றி, ஒலி மாசையும் அவை கட்டுப்படுத்தும். ஒலிமாசு சமீபகாலமாக அதிகரித்துக் கொண்டே செல்கிறது. உயிர்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான ஒலியை எழுப்பி தன்னை அடையாளப்படுத்திக் கொள்கின்றன. மனிதனும் அப்படி இருந்தவன்தான் என்பது தெரிந்ததே.

* * *

மகாத்மா காந்தி பிறந்த தினமான அக்டோபர் 2 முதல் நாடு முழுவதிலும் உள்ள சுற்றுலாத் தலங்கள், நினைவுச் சின்னங்களில் பாலிதீன் பைகள் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. தூய்மை இந்தியா திட்டத்தின் ஒரு பகுதியாக இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. சுற்றுச்சூழல் பாதிப்பில் முக்கியப் பங்கு வகிப்பது பிளாஸ்டிக் பொருள்களும் அதன் கழிவுப் பொருள்களுமே ஆகும். எனவேதான் அவற்றின் பயன்பாட்டைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கூறிக் கொண்டு இருக்கின்றார்கள். குறிப்பாக பாலிதீன் பைகளை ஒழிக்க வேண்டும் என்ற கோரிக்கை அதிகரித்து வருகிறது. அந்தப் பைகளுக்கு மாற்றாக பிறவகையாலான பைகளைப் பயன்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டு வருகிறது. உலக அளவில் பார்த்தால் ஆண்டுக்கு ஐம்பதாயிரம் கோடியிலிருந்து ஒரு லட்சம் கோடி வரையிலான அளவுக்கு பிளாஸ்டிக் பைகள் பயன்படுத்தப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு தனி மனிதனும் ஆண்டுக்கு சராசரியாக 150 பிளாஸ்டிக் பைகள் பயன்படுத்துவதாகவும் இவற்றில் பெரும்பாலானவை ஒரு முறை மட்டுமே பயன்படுத்திவிட்டு தூக்கி எறியப்படுபவை என்பதும் தெரியவந்துள்ளது. இந்தியாவில் மொத்த பிளாஸ்டிக் பொருள்களின் பயன்பாட்டில் 50 சதவீதத்துக்கும் அதிகமானது பாலிதீன் பைகளே. ஒரு பையைப் பயன்படுத்தும் நேரம் சராசரி இருபது நிமிடங்கள்தான். ஆனால் அவை மக்குவதற்கு 500 ஆண்டுகளுக்கும் மேல்ஆகும் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கழிவுகள் நிலத்தின் வளத்தைப் பாதிக்கின்றன. விவசாய நிலங்களில் பரவிக் கிடக்கும் பாலிதீன் கழிவுகள் மண்ணில் நீர் இறங்குவதைத் தடுப்பதுடன் காற்று பரவுவதையும் தடுக்கின்றன. இதன் காரணமாக மண்ணில் வாழும் நுண்ணுயிர்கள் சுவாசிக்க முடியாத நிலை ஏற்படுகிறது. அதுபோல் இந்தப் பைகளால் வனப் பகுதியும் பாதிப்படைகிறது. வனப்பகுதிகளில் உள்ள விலங்குகள் இவற்றை உட்கொள்வதால் பாதிப்படைகின்றன.

பெண்கள் கடைகளில் பார்க்கும் தட்டு, முட்டு சாமான்களை வாங்கி பரண்களில் தூங்க விடக் கூடாது. புழங்குவதற்கு என்ன அவசியமோ அவை மட்டும் வீட்டில் இருந்தால் போதுமானது. வீட்டில் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கேற்ப உணவு தயாரிக்க வேண்டும். அளவுக்கு அதிகமாகச் சமைத்து குப்பையில் போடுவதும், குளிர்சாதனப் பெட்டியில் வைத்து இரண்டு மூன்று நாட்களுக்கு உபயோகிப்பதும் தவறான பழக்கங்களாகும். குழந்தைகளுக்கு சாப்பாடு கொடுக்கும் பொழுது வயிறு முட்ட, முட்ட கொடுக்கக் கூடாது. எவ்வளவு சுவையான உணவாக இருந்தாலும் இரைப்பையில் அரை பாகம் சாப்பாடு, கால் பாகம் தண்ணீர், கால் பாகம் காலியாக வைத்திருப்பதால் உடல் ஆரோக்கியம் மேம்படும். அடிக்கடி வெளியில் வாங்கிச் சாப்பிடுவதற்குப் பதிலாக வீட்டிலேயே உணவு தயாரித்துக் கொடுப்பதால் பணம் மிச்சப்படுவதுடன் குடும்ப ஆரோக்கியத்தையும் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

உடை விஷயத்திலும் சிக்கனத்தைக் கடைபிடிக்க வேண்டும். குழந்தைகளுக்கான உடைகளை அலமாரி முழுக்க அடுக்கி வைத்து அவர்கள் ஓரிரு முறை பயன்படுத்தியபின் அல்லது பயன்படுத்தாமலேயே உடை சிறியதாகி விட்டதென்று கழிக்கும் நிலை நிறைய வீடுகளில் உள்ளது. நமக்கு வசதி இருந்தாலும் ஆடம்பரமான விலை உயர்ந்த உடைகளை அவர்கள் கேட்கிறார்கள் என்பதற்காக வாங்கித் தரக் கூடாது. எடுத்ததற்கெல்லாம் இருசக்கர வாகனத்தைப் பயன்படுத்தக் கூடாது. குழந்தைகள் படிக்கும் பள்ளியோ, கடை வீதிகளோ அருகில் இருக்கும்பொழுது அவர்களையும் கூட்டிக் கொண்டு நடந்தே செல்ல வேண்டும். இதனால் எரிபொருள் சேமிப்புடன் நடக்கவே சலித்துக் கொள்ளும் இந்தக் காலத்து குழந்தைகளுக்கு நடைப்பயிற்சியும் கொடுத்த மாதிரி இருக்கும். எளிமையாகவும், சிக்கனமாகவும் வாழ்பவர்களின் உள்ளங்கள் என்றும் ஆடம்பரத்தை விரும்பா. பேசும் வார்த்தைகளிலும் சிக்கனத்தைக் காட்டினால் நம் ஆற்றல் பெருகும், சக்தி மிச்சமாகும்.

ஒவ்வொரு வருடமும் நாம் சுதந்திர தினத்தை விமரிசையாகக் கொண்டாடுகிறோம். அப்பொழுது ஆண் பெண், சிறியோர் முதியோர், தொழிலாளி முதலாளி, ஏழை பணக்காரன் என சமூகத்தில் உள்ள அனைவரும் விரும்புவது எங்கும் சுதந்திரம், எதிலும் சுதந்திரம் என்பது ஆகும். ஆனால் சுதந்திரம் என்ற சொல்லின் பொருளை சரியானபடி அறிந்தவர் மிகச் சிலரே.

முதலாவதாக, நமது நாடு சுதந்திரம் அடைந்ததாகக் கூறி விழா கொண்டாடுகிறோம். அது சரிதான். ஆனால் உண்மையில் நாடு சுதந்திரம் அடைந்துவிட்டதா என்பதை நாம் ஆராய்வது நல்லது. உலக சேவை என்பது ஒவ்வொருவரின் சுயதர்மம் என்ற கருத்தை குழந்தைப் பருவத்திலேயே மனதில் உருவாக்கினால் தான் அது முறையாக மனதில் வேரூன்றும் என்பதை நாம் உணர வேண்டும். அத்தகைய கல்வியை நல்கும் வழக்கம் இப்போது உள்ளதா என்பதை நாம் நினைவுகூர வேண்டும். ஆங்கிலேயர் தந்த கல்வி முறையையும் அவர்களது மேலைநாட்டு கலாசாரத்தையும் துறந்து, நமது கல்வியை வளர்க்கவும், நமது பண்பாட்டைப் பேணிப் பாதுகாக்கவும் நாம் முயற்சி செய்கிறோமா என்று சிந்தனை செய்ய வேண்டும். இது அரசின் வேலை என்று சொல்வது சரியா என்பதையும் ஒவ்வொரு குடிமகனுக்கும் தனது தாய்நாட்டின் வளர்ச்சியில் பங்கு இல்லையா என்பதையும் நாம் யோசிக்க வேண்டும். பெற்றோரை முதியோர் இல்லத்தில் விடும் நாகரிகம் நமக்குச் சொந்தமானதா என்பதை நாம் நினைக்க வேண்டும். இன்றும் கூட்டுக் குடும்பமாக வாழும் முறையைப் பின்பற்றுவோரின் வாரிசுகள் விட்டுக் கொடுத்து வாழவும், நற்குணங்களின் இருப்பிடமாகத் திகழவும் செய்வதைக் காணும் கண்கள் நமக்கு இல்லாமல் போய்விட்டதா? தனதென உள்ள அனைத்தையும் துறந்து, நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட விடுதலை வீரர்களின் தியாகத்தை நாம் மறந்துவிடக் கூடாது. ஒவ்வொரு துறையைச் சேர்ந்தவர்களும் நாட்டு நலனைக் கருத்தில் கொண்டு, தங்கள் கடமையை ஆற்றினால், பாரதத்தாயின் அருளை நாம் பெற்று மகிழ அது வழி செய்யும்.

* * *

உலகத்திற்கே நீர் மேலாண்மையைக் கற்பித்த நம் தமிழகத்தில் வீடுகள் தோறும் இருந்த கிணறுகள் மூடப்பட்டு, ஆறுகள் அனைத்தும் கிணறுகளாகத் தோண்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. முன்னோர் கூற்றுப்படி "உணவே மருந்து" என்று வாழ்ந்து வந்த நாம், இன்று "மருந்தே உணவு" என மருந்தை மட்டுமே உணவாக்கிக் கொண்டிருக்கிறோம். விஞ்ஞான அறிவு வளர்ந்து கொண்டே போகிறது. அனைத்துத் துறைகளிலும் தமிழன் முதலிடத்தில் உள்ளான். நாசா, மைக்ரோ சாப்ஃட், மருத்துவம், பொறியியல், கலை என்று அனைத்திலும் தமிழர் பங்கு குறிப்பிடத்தக்க அளவிற்கு உள்ளது. இன்றைய ஏட்டுக் கல்வி நம்முடைய விஞ்ஞான அறிவை அதாவது தொழில் அறிவை வளர்த்துள்ளது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. தொழில் அறிவு மட்டும் போதுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நம் நாட்டில் மிக உயர்ந்த கல்வியாகக் கருதப்படும் ஐ.ஐ.டி. கல்வி பயிலும் மாணவர்களுக்குத் தரப்பட்ட உணவால் ஏற்பட்ட விரும்பத்தகாத நிகழ்வுகள் நமக்குக் கற்றுத் தந்த பாடம் என்ன? சற்றே ஆழ்ந்து சிந்தித்தால் தனிமனித வாழ்க்கை என்பது அவனை மட்டுமே சார்ந்தது என்ற தவறான அணுகுதலே அதற்குக் காரணம் என்பதை உணர முடியும். ஏந்த ஒரு தனி மனிதனும் தான்–சமுதாயம்–இயற்கை என்ற முக்கூட்டின் இணைப்பே.

